# இலங்கைக்கு கைக்குண்டுகளை விற்பனை செய்ய


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 மகார்கழி 3 இதழ் 305
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 18-12-1993


## ஆஸி அரசு மறுப்பு

(கன்பரா)

ஸ்ரீலங்கா அரசுக்கு கைக்குண்டுகளை விற்பனைசெய்ய அவுஸ்ரேலிய அரசு மறுப்புத் தெரிவித்துள்ளது.

ஆனால் அவுஸ்ரேலிய அரசின் இந் நடவடிக்கைக்கான காரணம் என்னவென்பது இது வரையில் தெரிவிக்கப்பட வில்லை.

இதேவேளையில் ஸ்ரீலங்கா

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ். செயலகத்தை திருத்த கட்டிடப்பொருட்களை அனுப்ப அரசு இணக்கம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படையினரின் விமானத்தாக்குதலுக்கு இலக்காகி சேதத்துக்குள்ளான யாழ். மாவட்ட செயலக கட்டிடத்தைதிருத்தி அமைப்பதற்காக முதல்கட்ட நடவடிக்கையாக எட்டு லட்சம் ரூபா பெறுமதியுள்ள கட்டடப் பொருட்கள் கொழும்பிலிருந்து அடுத்த வாரமளவில் வந்து சேரவுள்ளது.

அண்மையில் யாழ் மாவ

(2-ம் பக்கம் பார்க்க

# எமது ஆயுதபோராட்டம் இன்று பாரிய வளர்ச்சி பெற்று விட்டது

## யுத்தமுனையில் வீரசாதனை புரிந்த போராளிகளுக்கு தலைவர் பிரபாகரன் பரிசுவழங்கி கௌரவித்து உரை

[யாழ்ப்பாணம்]

"எமது ஆயுதப்போராட்ட வடிவம் இன்று என்றுமில்லாதவாறு வளர்ச்சி கண்டுள்ளது. கெரில்லாப் போர்முறையில் சிறிய அளவிலான தாக்குதல் நடாத்திவந்த நாம் இன்று பாரிய அளவில் படைத் தளங்களை தாக்கி அழிக்கும் சக்தி பெற்றவர்களாக வளர்ச்சி கண்டுள்ளோம். இவ் அபாரமான வளர்ச்சிக்கு வேவுப் (உளவு) பிரிவினரின் வளர்ச்சி முக்கியமானது"

தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் போர்முனையில் வீரசாதனை புரிந்த போராளிகளுக்கு பரிசுவழங்கி கௌரவித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். நேற்றுமுன்தினம் 16-ம் திகதி நடைபெற்ற இவ்வைபவத்தில் 17 போராளிகளுக்கு தலைவரால் பரிசுகள் வழங்கப்பட்டன.

2ம் பக்கம் பார்க்க]

### பரிசு பெற்ற போராளிகள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே.பிரபாகரனிடமிருந்து பரிசு பெற்ற 17 போராளிகளின் விபரம் வருமாறு: அழகன் அல்லது கிசு, சேரன், வெற்றிச் செல்வன் அல்லது விக்ரர், பூங்குன்றன் அல்லது மயூரன், இனியவன் அல்லது ரமேஸ், முகிலன், செம்மனத்தான் அல்லது குணவன், வீரப்பன் அல்லது தயா,

(2ம் பக்கம் பார்க்க)



தேசியத்தலைவர் பிரபாகரன் தாக்குதல் நடவடிக்கையில் வீரசாதனை புரிந்த சுதாகர் (மூவேந்தன்)க்கு பரிசுவழங்கிக் கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

## 5ம் ஆண்டு புல. பரிசு பெறுபேறுகள் யாழ். ஜோன்பொஸ்கோவில் 67 மாணவர் சித்தி

(யாழ்ப்பாணம்)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் நேற்று யாழ். மாவட்டத்தில் வெளியாகின.

யாழ். நகரப் பாடசாலைகளுள் யாழ் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் 67 மாணவர்கள் இந்தப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையில் 43 மாணவர்களும், யாழ்.

(4-ம் பக்கம் பார்க்க

## கோப்பாய் உடுவில் பகுதி முடிவுகள்

(உடுவில்)

இவ்வருடம் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையில் உடுவில் பிரதேச கல்விப் பிரிவு பாடசாலைகளில் இருந்து மொத்தம் 70 பேரும், கோப்பாய் பிரதேசக்கல்விப்பிரிவும் பாடசாலைகளில் இருந்து மொத்தம் 66 பேரும் சித்திடைந்துள்ளனர்.

கோப்பாய் பிரதேச கல்விப் பிரிவில் சித்தியடைந்தோர் தொகை வருமாறு:

(4ம் பக்கம் பார்க்க

## வெளிஉலக இராணுவ ஆலோசனையே யுத்தத்தை நீடிக்கவைக்கிறது!

(கொழும்பு)

"வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வு காண்பதற்காக இந்த அரசாங்கம் அயல்நாட்டவர்களின் ஆலோசனைகளைக்கேட்டு அதன்படி செயல்பட்டு வருவதனால் தான் யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவர முடியாது அரசு திணறிக்கொண்டிருக்கிறது"

இவ்வாறு நீர்கொழும்பு மாநகரசபையில், பூநகரி மோதலில் பலியான படை

(4ம் பக்கம் பார்க்க)

## பூநகரி விவகாரம்: படை அதிகாரிகளுக்கு எதிராக தெ. ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பூநகரி யுத்தத்தில் நூற்றுக்கணக்கான படையினர் பலியாவதற்கு காரணமாக இருந்த அதிகாரிகள் அனைவரையும் பதவி நீக்கம் செய்து, இராணுவ நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்த வேண்டும் என்று "ருஹுணுராட்ட முன்னணி" என்ற புதிய அமைப்பைச் சேர்ந்தோர் நடாத்

(2ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

பஞ்சு மிட்டாய், ஐஸ்பழ வகைகளை துவிச்சக்கரவண்டி, தள்ளுவண்டி மூலம் விற்பனை செய்யக்கூடியவர்கள் உடன் தேவை. வானவில், குளிர் பானசாலை, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (சி-662)

### லஞ்சங்கள்

5-12-93 வீரகேசரி வார மலரில் வெளியான அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் 'லட்சங்கள்' சிறுகதை வாசித்தீர்களா? அவரது நாடக நூல்கள்: 1. கெட்டிக்காரர்கள். 2. முதலாம் பிள்ளை 30/- (சி-650)

### புதிய எழுத்தாளர்களே மகிழ்ச்சியான அறிவிப்பு!

புதிய எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்கு ''மீரா பிரசுரம்'' ஒரு திட்டத்தை உருவாக்கி செயல்படுத்த இருக்கிறது. முழுவிபரம்: தாமரைச் செல்வி எழுதும் ''தாகம்'' நாவல் தொண்ணூற்றி ஒன்பதாம் பக்கத்தில். (சி-660)

### வைத்தியம்

செங்கண்மாரி, (Hepatitis) குடற்புண், தொய்வு, வாத ரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலைசுழலல், சருமநோய்கள், மாதவிடாய்க் குழப்பம், இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, விந்துக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களின் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி இ. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம். (இ-626)

புதிய விஞ்ஞானபீட மாணவர்களுக்கான

### வகுப்புக்கள்

1992 / 93

கல்வியாண்டு

மேற்குறித்த மாணவர்களுக்கு 20-12-1993ல் ஆரம்பமாகவிருந்த வகுப்புகள் பிற்போடப்பட்டுள்ளன. ஆரம்பமாகும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

பதிவாளர்.

(ஏ 3669)


## அறிவாலய ஆண்டுவிழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை டமுனத்தை வலம்புரி அறிவாலய முதலாம் ஆண்டு நிறைவு விழா அறிவாலயத்தலைவர் திரு. பொன் பூரணம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. தமிழீழ அரசியல் படித்துறைப் பள்ளி பொறுப்பாளர் திரு. அரசண்ணா தமிழீழ தேசியக் கொடியை ஏற்றினர். பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் திரு. ச. செல்வத்திநாதர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (52)

## தெருக்கூத்து

(கொழும்புத்துறை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்ட கால நிகழ்வுகளைச் சித்தரிக்கும் தெருக்கூத்துக்கள் கொக்குவில், மூளாய், சுழிபுரம் ஆகிய பகுதிகளில் இடம்பெற்று வருகிறது. —154

## சீருடைத் துணிகள்

(மானிப்பாய்)

யாழ். செயலகத்தில் பணிபுரியும் அலுவலக ஊழியர்களுக்கு இவ்வருடத்திற்குரிய சீருடைத் துணிகள் கடந்த வாரம் வழங்கப்பட்டன. —71

## தரிசுக் காணி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

காணியற்ற விவசாயிகளை பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்துவதன் ஊடாக உற்பத்தியினை அதிகரிக்கச்செய்யும் நோக்குடன் வவுனியாக் கோட்டத்திலே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிராமிய உற்பத்திக் குழுக்களூடாக தரசுக்காணிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன் தொடர் நடவடிக்கையாக நெடுங்கேணி வட்டத்திலும் பூவரசங்குளம் வட்டத்திலும் ஓமந்தை வட்டத்திலும் பயிர்ச்செய்கைக்கென காணிகள் இக்காலப்போகத்திற்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகம் நடாத்திவரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இன்றைய ஆட்டத்தில் 'பி' பிரிவில் அரியாலை ஐ வி. எதிர் பாடும் மீன் அணியும் 'ஏ' பிரிவில் சென். மேரிஸ் எதிர் சென் அன்ரனிஸ் அணியும் மோதுகின்றன.

அடையாள அட்டை

## விண்ணப்பித்தோர் கவனத்திற்கு

(மானிப்பாய்)

யாழ். மாவட்டத்திலிருந்து தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பித்துவிட்டு அவ்விண்ணப்பம் தொடர்பாக அறிய விரும்புகிறவர்கள் விண்ணப்பப் பற்றுச் சீட்டுக்களுடன் தமது பகுதி உதவி அரசாங்க அதிபரால் எமக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தையும் பெற்றுக்கொண்டு வருமாறு யாழ். ஆட்பதிவுத் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் வி. பி. வேலாயுதபிள்ளை அறிவித்துள்ளார். [71]

# இனப்பிரச்னைக்கு தீர்வுகாண சுதந்திரக் கட்சியிடம் திட்டமுண்டு

(கொழும்பு)

இனப்பிரச்னை தீர்வுதொடர்பாக சுதந்திரக் கட்சியிடம் தீர்வுத்திட்டம் உள்ளது. ஆனால் அதனை தாம் தற்போது முன்வைக்கப்போவதில்லை என சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இனப்பிரச்னைக்கு ஆட்சியாளரே தீர்வை முன்வைக்க வேண்டும். அரசிலுள்ள சிலருக்கு லாபம் ஈட்டிக்கொடுக்கும் களமாக இந்த யுத்தம் உள்ளது. போர்முனையில் உள்ள வீரனின் காலுறைக்கு பணம் வழங்கப்படுவதில்லை. ஆனால் போன மாதமும் அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக நாடாளுமன்றில் விசேட பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது.

இலங்கையில் இனப்பிரச்னை இருப்பதை ஏற்று அதனை தீர்க்க அரசு உடனடியாக தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும் என்றார். (இ)

## அமைதிக்காகப் பிரார்த்தனை

(கொழும்புத்துறை)

கிளாலி வித்தகர் ஸ்ரீ விநாயகர் பிரார்த்தனை நிலையத்தில் அமைதி, சமாதானம், சுபீட்சம் நிலவ இறைஆசி வேண்டி மீண்டும் பிரார்த்தனை நடைபெற்றது. —154

## புனித-நீக்கலார் திருவிழா

(அரியாலை)

யாழ். சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் புனித-நீக்கலார் வருடாந்தத் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. —59

## திருவிளையாடல் புராணம் முற்றோதல்

(கொழும்புத்துறை)

மீசாலை அருள்மிகு ஸ்ரீ திருநீலகண்ட வெள்ள மாவடிப் பிள்ளையார் கோவிலில் திருவிளையாடற்புராணம் முற்றோதல் விசேட அபிஷேகம், பூசை ஆராதனை வழிபாட்டுடன் இடம்பெற்றது. — 155

## சோதிடப் பயிற்சி வகுப்பு

(நெல்லியடி)

துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய மடத்தில் இலவச சோதிடப் பயிற்சி வகுப்பு நடைபெற்று வருகின்றது.

பொலிகண்டியைச் சேர்ந்த திரு த. க. தேவசிகாமணியினால் இச்சோதிடப் பயிற்சி வகுப்பு நடாத்தப்பட்டு வருகின்றது. -160

## பனைவிதை நடுகை

(பருத்தித்துறை)

பனை அபிவிருத்திச்சபையின் மாதிரி பனந்தோட்ட அமைப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக புலோலி சிங்கை நகர் மாதிரிப் பனந்தோப்பில் இவ்வருடம் மேலும் ஐந்து ஏக்கர் நிலத்தில் பனை விதை நடுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. -52

## வசந்தபுரம் மக்களுக்கு நிரந்தர குடியிருப்பு

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை வசந்தபுரம் பகுதியில் தற்காலிக குடிசைகள் அமைத்து பல கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வந்த நாற்பதுக்கும் மேற்பட்ட வறிய குடும்பங்களுக்கு நிரந்தர குடியிருப்பு வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு மெதடிஸ்த திருச்சபை முன்வந்துள்ளது.

கடந்த பத்து வருடங்களுக்கு முன் இப்பகுதியில் வந்து குடியேறிய மக்கள் சிறு சிறு கொட்டில்களை அமைத்து பல கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

நாவாந்துறை அண்ணா சனசமூக நிலைய நிர்வாகிகள் எடுத்த தீவிர முயற்சியால் இந்தக் குடியிருப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு யாழ். மெதடிஸ்த திருச்சபை நிர்வாகம் முன்வந்தது.

இதன் முதற்கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது இருபதுக்கும் மேற்பட்ட வீடுகள் பூர்த்தியடைந்துள்ளன.

இதேவேளை இவர்களின் குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை யாழ். மாநகரசபை மேற்கொண்டு வருகிறது. -162

## மண்ணெண்ணை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக பட்டப் படிப்பினை மேற்கொள்ளும் 1992 / 1993ம் கல்வியாண்டுக்கு பதிவு செய்த உள்வாரி மாணவர்களுக்கும், இராமநாதன் நுண்கலைத்துறை மாணவர்களுக்கும், பல்கலைக்கழக ஊழியர்களுக்கும் தலா பத்து லீற்றர் மண்ணெண்ணை லீற்றர் ரூபா 22 வீதம் வழங்கப்படவுள்ளது.

## அரவம் தீண்டி மரணம்

(நெல்லியடி)

அரவம் தீண்டிய இளம் குடும்பஸ்தர் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்கையில் அம்புலன்ஸில் மரணமானார்.

புலோலி கிழக்கு சந்தைத் தோட்டத்தைச் சேர்ந்த பாலசிங்கம் (வயது 36) என்னும் நான்கு பிள்ளைகளின் தந்தையே வவுனியா இளமருதங்குளத்தில் இவ்வாறு மரணமானவராவார். -160-சி

பரிசு பெற்ற

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அருளி, பேரம்பலம் அல்லது கீரோ, இளங்கோ, மணிமாறன் அல்லது சீலன், திருவருள் அல்லது எமர்சன். குமரன், மலையப்பன் அல்லது சுதாகர் அல்லது ஈசன், சுதாகர் அல்லது மூவேந்தன், சுதாகரன் -இ

யாழ். செயலகத்தை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ட்ட செயலகம் மீதுவிமானத் தாக்குதல் பற்றியும் பாதுகாப்பு விவகாரங்களுக்குப் பிரதமர் என யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் எடுத்துக்கூறியுள்ளார்.

முதல் தடவையாக செயலகத்திருந்த வேலைகளுக்குவேண்டிய சீமெந்து, கூரைத்தகடு, கம்பிகள் போன்ற பொருட்களை எடுத்துவர அனுமதிக்கப்படுவதாக யாழ் அரச அதிபர் தெரிவித்தார். தொடர்ந்து இதற்கு வேண்டிய பொருட்கள் கட்டம் கட்டமாக எடுத்து வரப்படுமென்றும் இதற்கான அனுமதியை அரசாங்கம் வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (162-இ)

பூநகரி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாரம் பெரும் ஆர்ப்பாட்டம் நடாத்தியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பூநகரி மோதலின்போது அங்கிருந்த இராணுவ, கடற்படை அதிகாரிகளை பாதுகாப்பு அமைச்சு உடன் பதவி நீக்கம் செய்யவேண்டும், பதவி நீக்கம் செய்யப்படும் அதிகாரிகள் உடனடியாகக் கைது செய்யப்பட்டு இராணுவ நீதிமன்றத்தின் முன்னால் விசாரணைக்கு நிறுத்தப்படவேண்டும் என்று மேற்படி அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. -வீ-இ

எமது ஆயுத போராட்டம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: வேவுப் பிரிவினர் பெற்றுத்தரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டே நாம் தாக்குதல் திட்டங்களை வகுக்க முடிகிறது. தாக்குதல்களை வெற்றிகரமாக நடத்த முடிகிறது.

வேவுப் பிரிவுப் போராளிகளின் துணிகர சாதனை மூலமாகவே நாம் பூநகரிப் பெரும் சமரில் வெற்றியீட்ட முடிந்தது.

வேவுப் பிரிவைச் சேர்ந்த போராளிகள் மிகவும் நிதானமாக செயற்படவேண்டியுள்ளது. அவர்களது ஒவ்வொரு அசைவும் ஆபத்து நிறைந்தது. மிகவும் துணிவுடன் உயிரைப் பணயம் வைத்து மேற்கொள்ளப்படும் பணியில் எத்தனையோ போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொள்கிறார்கள்.

இவர் தாம் புரிந்த வீரச் சாதனைகளுக்கு பரிசு கிடைக்கும் முன்பாகவே புதிய தாக்குதலுக்கான வேவுப்பணியில் ஈடுபட்டு தமது இன்னுயிரை ஈகம் செய்கிறார்கள்.

உன்னதமான இவ் அர்ப்பணிப்புகளின் பயனாகவே பெரும் வெற்றிகளை ஈட்ட முடிகிறது என்றார்.

கடும் யுத்தங்கள் நடைபெறும்வேளையில் களத்தில் இறங்கி ஆபத்துக்கள் மத்தியில் வீடியோப் புகைப்படம் எடுத்த போராளிகளின் துணிவையும் அவர் பாராட்டினார். இப்பணியின்போது சிலர் வீரச்சாவடைந்ததையும் சுட்டிக்காட்டினார்.

பல்வேறு இராணுவ நடவடிக்கைகளில் வீரச்சாதனை புரிந்த 17 போராளிகளுக்கு தலைவர் பரிசு வழங்கினார்.—ஈ


சன்மார்க்க சபை - குரும்பசிட்டி

மணிவிழா நிகழ்ச்சித் தொடர் - 03

## இரசிகமணி கனகசெந்திநாதன் நினைவு இலக்கியச் சந்திப்பு

இடம்: யாழ்ப்பாணம் நாவலர் மண்டபம்
காலம்: 19-12-1993 ஞாயிறு காலை 9 மணி.
தலைவர்: கலாகேசரி ஆ. தம்பித்துரை.

தொடக்கவுரை:- பேராசிரியர் அ. சண்முகதாஸ் (தலைவர் தமிழ்த்துறை, யாழ் பல்கலைக்கழகம்)

நினைவுப்பேருரை: 'இரசிகமணியும் படைப்பாளிகளும்' கலாநிதி நந்தியசா குணராசா (செங்கை ஆழியான்)

கருத்தரங்கு: 'அனுபவம் பேசுகிறது'
செம்பியன் செல்வன், ஏ. சிதம்பரநாதன், வீரமணிஐயர், கோகிலாமகேந்திரன்

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஏ. ரி. பொன்னுத்துரை,
வைத்திய கலாநிதி எஸ். பிரபாகரன்
இணைச்செயலாளர்கள்

மணிவிழாச்சபை,
குரும்பசிட்டி. (சி-652)

**மணிவாக்கு**

காலத்தை ஒத்திப் போடாதே தாமதத்தின் முடிவுகள் ஆபத்தானவை

- வில்லியம் ஷேக்ஸ்பியர்

# நவீனரக யுத்த விமானங்கள் விரைவில் இலங்கை வருகிறது

## புதிய ரக டாங்கிகளும் கொள்முதல்

(கொழும்பு)

விமானப் படையினருக்கு நவீன தாக்குதல் விமானங்களைக் கொள்வனவு செய்வதற்குச் சர்வதேச ரீதியில் 'டென்டர்'கள் கோரப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

விமானப் படையினர் தற்போது பாவிக்கும் பெல்-212 மற்றும் 312 ரக ஹெலிகொப்டர்களுக்குப் பதிலாக வேறு தாக்குதல் விமானங்களைக் கொள்வனவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இராணுவத்தின் பீரங்கிப் படையினர், 2வது உலக மகா யுத்த காலத்தில் பாவிக்கப்பட்ட யுத்த டாங்கிகளையும், 83ம் ஆண்டுக்குப் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட ரி-85, ரி-55, ரி-56 ரக யுத்த டாங்கிகளையும் பாவித்து வருகின்றனர். இந்த டாங்கிகள் தற்போதைய யுத்தத்தில் அழிக்கப்பட்டு வருகின்றன.

பூநகரித் தாக்குதலின்போது புலிகளிடம் சிக்கிய படையினரை மீட்பதற்குக் கப்பலில் எடுத்துச் செல்லப்பட்ட செக்கோஸ்லவாக்கியத் தயாரிப்பான ரி-55 ரக யுத்த டாங்கிகளைக் கப்பலிலிருந்து இறக்க முடியாத நிலையில் பலமுறை அவை திரும்பிய சம்பவங்களை அடுத்து, இன்று உலக யுத்த அரங்கில் முன்னணியில் திகழும் 'அம்பிபியஸ் டாங்கிகளை' (Amphibious Tank) வாங்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த டாங்கிகள் கடலில் செல்லும்போதுகூட தரையில் இருக்கும் எதிரிகளைத் தாக்கும் வல்லமை வாய்ந்தவை. இவற்றை வாங்குவதற்காகப் பல நாடுகளுக்கு இராணுவ நிபுணர்கள் குழு செல்லவிருக்கிறது. (கி)

## 366 படை அதிகாரிகள் தப்பி ஓட்டம்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்திலிருந்து 366 அதிகாரிகளும் 9.717 சிப்பாய்களுமென பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் தப்பியோடிவிட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

எனினும் இதுவரை காலத்தில் தப்பியோடியோர் தொகை 17,000 திற்கும் அதிகமென ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்துள்ளன.

இவர்களை தேடிக் கண்டு பிடிக்க இராணுவ பொலிஸார் உஷார்படுத்தப்பட்டுள்ள போதும் பிடிபடுவோர் தொகை மிகச் சொற்பமே எனவும் தெரிவிக்கப்படுகிறது. (கி)

## விமான விபத்து: 29 பேர் பலி

(மணிலா)

பிலிப்பைன்ஸில் இடம் பெற்ற விமான விபத்தில் 29 பேர் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அந்த விமானம், அண்மையில் ஏற்பட்ட சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை ஏற்றிக்கொண்டு செல்லும்போது இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. ம-கி

## நமது நோக்கு

### அரசின் சூழ்ச்சி!

இலங்கை அரசு ஜனநாயகத்தை எப்படிப் பேணிக் காக்கின்றது என்பதற்கு தென் மாகாண சபையின் செய்திகள் நல்ல சான்றாகும்.

ஐ. தே. க. போதிய பலமின்றி இருந்த போதும், ஆளுநர் அக்கட்சித் தலைவரை முதலமைச்சராக நியமித்தார். மக்கள் தீர்ப்புக்கு அரசு கொடுத்த மதிப்பு எத்தகையது என்பதை உலகம் அறிந்தது.

இந்த விவகாரம் நீதிமன்றத்திற்குச் சென்றது. ஆளுநர் ஜனநாயக விரோதமாக, சட்டவிரோதமாக நடந்து கொண்டார் என்ற தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதேபோலத் தீர்ப்பு வடமேல் மாகாணசபை விவகாரத்திற்கும் கிடைத்தது. அதன் ஆளுநர் பதவி விலகினார்.

ஆனால், தென் மாகாண சபை ஆளுநர் பதவி விலகவுமில்லை; எதிர்க்கட்சித் தலைவர் முதலமைச்சராகப் பதவியேற்கச் சென்றபோது தேவையற்ற தாமதங்களையும் இழுத்தடிப்புகளையும் செய்தார்.

வன்முறைகளும் இடம் பெற்றன. பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டினால் உயிரிழப்பும் ஏற்பட்டது.

மக்கள் தீர்ப்பை அரச பயங்கரவாதத்தால் மடக்க எடுத்த நடவடிக்கைகள் எனக் கருதப்பட்டது.

அத்தோடு நிற்கவில்லை அந்தக் கதை.

தற்போது, தென் மாகாணசபைபற்றிய பரபரப்பான மர்மத் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன.

ஆளும்கட்சி உறுப்பினர் ஒருவர் மர்மமான முறையில் காணமற் போயிருக்கிறார். எதிர்க்கட்சியின் அதிகாரத்தில் இருக்கும் அச்சபையைப் பறித்தெடுக்கும் ஒரு சூழ்ச்சி நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளது என முதலமைச்சர் அமரசிறி தொடம்கொட குற்றம் சமத்தியுள்ளார்.

ஆண்டாண்டு காலமாக, மலையகத்தவர் குடியுரிமைகளைப் பறிக்கவும், தமிழர்களின் நிலங்களைப் பறிக்கவும், மொழி உரிமைகளையும், தன்னாட்சி உரிமைகளையும் பறித்தெடுக்கவும் அரசு பல்வேறு சூழ்ச்சிகளைச் செய்து வந்தது.

தற்போது, பதவியாசையால் தமது மக்கள் மீதே அதே சூழ்ச்சிகளைச் செய்து ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்து வருகின்றது.

இத்தகைய, ஜனநாயக விரோத அரச நடவடிக்கைகளிலிருந்து, அரச பயங்கரவாதத்திலிருந்து தமிழர்கள் தப்பி தனியாகி அமைக்க வேண்டுமென்பதில் தவறு என்ன?

## அரசின் வேண்டுகோளின்படியே 'சிசில்' ராஜினாமா செய்தார்

(கொழும்பு)

இலங்கை அரசினது விடுத்த வேண்டுகோளின் பேரிலேயே பதவிக்காலம் முடிவு முன்னர் ராணுவ தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்ன தனது ராஜினாமாவை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளார்.

பூநகரி தோல்வியை அடுத்து ராணுவ தளபதி சிசிலுக்கு இந்த கட்டாய உத்தரவை ஜனாதிபதி பிறப்பித்திருந்தார். இதற்கேற்ப சிசிலும் தனது ராஜினாமா பத்திரத்தை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க அவரும் அதனை ஏற்றுள்ளார்.

இம்மாதம் 31ம் திகதி பதவி விலகும் சிசில் தற்போது லீவில் சென்றிருப்பதாகவும் ராணுவ வட்டாரங்கள் கூறியுள்ளன. புதிய ராணுவ தளபதியாக மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா, லெப். ஜெனரலாக பதவி உயர்த்தப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை மரபுப்படி இராணுவ தளபதியாக நியமிக்கப்படுபவர் லெப். ஜெனரல் பதவி வகிக்க வேண்டும் என்பதும் முக்கியமானதாகும். (கி)

## நவாஸ் ஷெரீப் மறுப்பு

(இஸ்லாமபாத்)

தம்மை விஷமூட்டிக் கொலை செய்ய எத்தனித்ததாக, பாகிஸ்தான் அதிபர் குலாம் இஷாக்கான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் மீது குற்றம்சாட்டி இருந்ததை, நவாஸ் ஷெரீப் மறுத்துள்ளார்.

இதற்காகப் பாகிஸ்தான் அதிபர் குலாம் இஷாக்கான் மீது சட்ட நவடிக்கை எடுக்கப்போவதாக நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார். ம-கி

## ஆயிரம் தமிழர்கள் மட்டக்களப்பில் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பகுதியில் பேத்தாழை, பண்டிமுனை ஆகிய கிராமங்கள் விசேட அதிரடிப்படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு ஆயிரம் தமிழர்கள் கைது செய்யப்பட்டு வாழைச்சேனை பஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் தலைமாட்டிமுன் நிற்க வைத்து ஒரு பெண் மற்றும் 11 ஆண்கள் பிடிக்கப்பட்டு பின் மடு ராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டு கடும் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டனர்.

இவர்கள் விசேட அதிரடிப் படையினரின் சித்திரவதைக்குட்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது இப்பகுதிக்கிராமக்கள் வாரத்திற்கு இருதடவைகள் அதிரடிப் படையினரால் சுற்றிவளைப்புக்குள்ளாக்கப்படுவதாகவும் தெரியவருகிறது. (ம-கி)

## 19 குடியிருப்பாளருக்கு குடிசைகள் வழங்கப்பட்டது

(உடுவில்)

வலிகாமம் மேற்குப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த 19 குடியிருப்பாளர்களுக்கு குடிசைகள் வழங்கும் வைபவம், உடுவில் ஆலடியில் நடைபெற்றது.

இப்பகுதியில், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் அமைக்கப்பட்ட மாதிரிக் குடியேற்றத் திட்டத்தின் கீழ் இக்குடியிருப்பாளர்களுக்கு குடியிருப்புகள் உருவாக்கிக் கையளிக்கப்பட்டன.

குடியிருப்பை வலிகாமம் அரசியல் பொறுப்பாளர் திரு. திருக்குமரன் திறந்துவைத்தார்.

உடுவில் பகுதிப் பொறுப்பாளர் திரு. ஒப்பிலாமணி தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

குடியிருப்பாளர்களின் வீட்டுத் திறப்புகள், யாழ். மாவட்டத் துணை அரசியல் பொறுப்பாளர் திரு. இளையவன், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப் பொறுப்பாளர் திரு. பாலகிருஷ்ணன், திரு. பாஸ்கரன் ஆகியோர் வழங்கினர். -109

## வீட்டுத்தோட்டம், தேனீ வளர்ப்பு பற்றி கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மதிகட வேளாண்மைப் போட்டியிலே கூடுதலானவர்களை பங்கு கொள்ளச் செய்யும் நோக்கோடு யாழ் மாவட்டம் முழுவதும் தொடர் கருத்தரங்குகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பரவலாக நடாத்தி வருகின்றது.

இதன் முன்னோடி நடவடிக்கையாக கடந்த 8ம் திகதி பி.ப. 2-30 மணியளவில் கொட்டடி நமசிவாயம் வித்தியாசாலை மண்டபத்திலும், மாலை 4 மணியளவில் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையிலும் மாலை 5 மணியளவில் மடம் வீதி ரகினி பாலர் பாடசாலை மண்டபத்திலும் கருத்தரங்குகள் நடைபெற்றன.

இந்த கருத்தரங்குகளில் வீட்டுத்தோட்டம், கால்நடை வளர்ப்பு, தேனீ வளர்ப்பு தொடர்பான கருத்துரைகள் வழங்கப்படுவதுடன் கலந்துரையாடலும் இடம்பெறுகிறது.

இந்த கருத்தரங்குகளில் பொதுமக்களுடன் கால்நடை சுகாதார உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்களும் பங்கு பற்றி கலந்துரையாடி வருகின்றனர்.

**வனமின்றிப்போனால் - நம் இனமின்றிப் போகும்**

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தின் ஒளிவிழா நிகழ்வு இன்று காலை மருதனார்மட விவசாயக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் பிரதமவிருந்தினராக அதிவண. டி. ஜே. அம்பலவாணர் கலந்து கொண்டு நத்தார் செய்தி வழங்கவுள்ளார்.

வணக்கத்துக்குரிய டி. எஸ். தியாகராசா தலைமையில் இவ்விழா நடைபெறும். -ம

0 0 0

(பண்டத்தரிப்பு)

மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலயத்தில் விநாயக சஷ்டியை முன்னிட்டு தினமும் விநாயக புராணபடனம் நடைபெற்று வருகின்றது. இன்று 18ம் திகதி சனிக்கிழமை கஜமுகாசுரசம்ஹாரம் உற்சவமும் விசேட அபிஷேக ஆராதனையும் நடைபெறவுள்ளது. -72

0 0 0

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இந்து மயானப் பரிபாலன சபையின் விசேட ஆட்சிக் குழுக் கூட்டம், இன்று சனிக்கிழமை மாலை 3-30 மணிக்கு சபைத் தலைவர் திரு. க. மார்க்கண்டு தலைமையில் நடைபெறவுள்ளது. -154

0 0 0

(யாழ்ப்பாணம்)

போதனா வைத்தியசாலை தொண்டர்களுக்கான விசேட கருத்தரங்கு, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைமையகத்தில் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

## இராசிபலன்

18-12-1993

சனிக்கிழமை

(தமிழுக்கு மார்கழி 03)

பஞ்சமி பி. ப. 2-07வரை, அவிட்டம் மு. இ. 10-06வரை சித்தாமிர்தயோகம், இராகு காலம் காலை 9-23 முதல் 10-53 வரை, சுபநேரம் காலை 3-23 முதல் 4-53 வரை.

மேடம்- தெய்வ சிந்தனை, தொழில் சிறப்பு, குடும்பகுதூகலம்

இடபம்- பெரியோர் ஆலோசனை, புத்திரர் செலவு, காரிய சித்தி.

மிதுனம்- கடமை உணர்வு, விரோதிகள் தொல்லை பாராட்டு.

கடகம்- மனவேதனை வசதியற்ற நிலை, போராட்டம்.

சிங்கம்- விநோத எண்ணம், பணவரவு, தாயன்பு.

கன்னி- அதிகாரிகள் உறவு, பண அனுகூலம், வீட்டில் சுபம்.

துலாம்- புத்திரசாமர்த்தியம், தவறான தகவல், காரியதடை

விருச்சிகம்- உடல் உபாதை, பழிசொல்லுதல், தொழில் நஷ்டம்,

தனுசு- எதிலும் நிச்சயமற்ற தன்மை, அதிமயோசனை, வெறுப்பு.

மகரம்- தவறான சந்திப்பு, அஞ்ஞானவாசம், வேதனை.

கும்பம்- கருத்து மோதல், தெய்வதரிசனம். நண்பர் உறவு.

மீனம்- பழைய நினைவுகள், கடும்சினம், சகோதர பகை.

—ஜோஸ்யர்.

# உயர்கல்வி அமைச்சராக அநுரா நேற்று நியமனம்

## வேறு அமைச்சர்களும் மீண்டும் பதவிப்பிரமாணம்

(கொழும்பு)

திரு. அனுரா பண்டார நாயக்கா உயர் கல்வி அமைச்சராக நேற்று பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க முன்னிலையில் நேற்று இவரது பதவிப் பிரமாணம் நடைபெற்றது.

நாடாளுமன்ற அங்கத்தவர் திஸ்ஸ அத்தநாயக்கா பல்கலைக்கழக விவகார கருத்திட்ட அமைச்சராக பதவி ஏற்றுள்ளார்.

கல்வி, உயர் கல்வி அமைச்சுக்கள் வெவேறாக பிரிக்கப்பட்டு இருப்பதினால் டபிள்யூ ஜே. எம். லொக்குபண்டார கல்வி, கலாசாரத்துறை அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். பதவி செயல்பாடு மாற்றங்களினால் பல திட்ட அமைச்சர்களும், இராஜாங்க அமைச்சர்களும் மீண்டும் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

அவர்கள் விபரம் வருமாறு: சுனேத்திரா ரணசிங்க கல்விச் சேவைகள் அமைச்சர்; பி. வி. கவிரத்ன சமூக கலாசார ஒருங்கிணைப்பு அமைச்சர், பி. பி. தேவராஜ் இந்து சமய கலாசார விவகார இராஜாங்க அமைச்சர். ராஜ மனோகரி புலேந்திரன் கல்வி இராஜாங்க அமைச்சர். ஏ. எச் எம். அஸ்வர் முஸ்லிம் சமய இராஜாங்க அமைச்சர்.

-ம-இ

# றெனி டி மெல் ஆவேசப் பாய்ச்சல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியில் மீண்டும் இணைந்து கொள்ள தற்கு விண்ணப்பம் கொடுத்ததையும், ஐ.தே.க. அரசு ஆளுநர் பதவியை வழங்கிய விவகாரத்தையும் முன்னாள் நிதியமைச்சரான றெனிடி மெல் நேற்று கடும் கோபத்துடன் மறுத்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் மீண்டும் நீங்கள் சேர்ந்து விட்டதாகவும், தென்மாநில ஆளுநர் பதவியை ஏற்கப்போவதாகவும் பலதரப்பட்ட வதந்திகள் கொழும்பில் அடிபடுகின்றனவே இது உண்மையா? என பி.பி.ஸி. நிருபர் திரு. றெனி டி மெல்லிடம் கேட்டபோது அவர் மிகக் கோபமாக பின்வருமாறு பதிலளித்தார்.

இது ஒரு மூன்றாம் தரத்துப் பொய். எனக்கு கிடைக்கவிருந்த ஓய்வூதியத்தையே உதறித்தள்ளிவிட்டு கட்சியிலிருந்து வெளியேறியநான் சர்வாதிகார ஆட்சியை தற்போது நடாத்திவரும் ஐ. தே. கட்சியில் எதற்காக மீண்டும் சேர்ந்து அதுவும் ஆளுநர் பதவியை ஏற்கப்போகின்றேன் என்று கோபமாகக் கூறினார். இ-வி

## வடபகுதி

# ஆசிரிய வெற்றிடங்களை ஆராய கொழும்பில் மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை பற்றிய விபரங்கள் சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று அடுத்த மாதத்தில் கொழும்பில் நடைபெறவுள்ளது என யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்,—

மேற்படி மாவட்டங்களிலுள்ள ஆசிரிய வெற்றிடங்கள் பற்றிய விபரங்களை அந்தந்தப் பகுதி அரசாங்க அதிபர்கள் திரட்டி அடுத்த மாதம் நடைபெற இருக்கும் கூட்டத்தில் அரசாங்க அதிபர்கள் சமர்ப்பிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்தக் கூட்டம் திறைசேரி செயலாளர் திரு. பாஸ்கர லிங்கம் தலைமையில் நடைபெறும். கல்வித் திணைக்கள அதிகாரிகளும் இதில் கலந்து கொள்வார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார். —162

## தபால்களை யாழ். அனுப்ப

# புதிய நடவடிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கு தபால்களை அனுப்பும் முறையில் தபால் திணைக்களம் புதிய அணுகுமுறை ஒன்றை கையாளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசு திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள் மற்றும் வர்த்தக ஸ்தாபனங்கள் ஆகியவை அனுப்பும் உத்தியோக பூர்வ கடிதங்களுக்கு முன்னுரிமை கொடுத்து அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

ஏனைய கடிதங்களும் அலுவலக கடிதங்களும் செல்லும் போது தாமதங்கள் ஏற்படுகின்றன இதையடுத்து யாழ். குடாநாட்டுக்கான கடிதங்களை கொழும்பில் டி. ஆர். விஜயவர்த்தன மாவத்தையிலுள்ள மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் சாதாரண அலுவல் நேரங்களில் கையளிக்கலாம். ஞாயிற்றுக்கிழமை இது ஏற்றுக்கொள்ளப்படாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-இ)

## வெளி உலக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வினருக்கு இரங்கல் தெரிவித்து நடைபெற்ற விசேட கூட்டத்தில் பல உறுப்பினர்கள் உரை நிகழ்த்தியபோது தெரிவித்தனர்.

அரசு நடாத்திவரும் யுத்தத்தை கண்டித்து உறுப்பினர் ஒருவர் பேசுகையில், தோல்வி அடைந்துவரும் யுத்தத்தை அரசாங்கம் நீண்டகாலமாக நடாத்திவருகின்றது. இந்த யுத்தத்தினால் எமது நாட்டு மக்களே பலியாகி வருகின்றார்கள். பூநகரி யுத்தத்தினால் தென்பகுதியில் பல பெண்கள் கணவன்மார்களை இழந்து விதவையாகி விட்டார்கள். தாய்மார் தமது பிள்ளைகளை இழந்து தவிக்கின்றார்கள்.

வடக்கில் விமானக்குண்டு வீச்சுக்களினால் தேவாலயங்கள் அழிக்கப்படுவதுடன் நூற்றுக்கணக்கான பொதுமக்களும் பலியாகிவருகின்றார்கள். இந்த அர்த்தமற்ற போரினால் அரசு கோடிக்கணக்கான ரூபாய்களை வீண்விரயமாக்கி வருகின்றது. இந்த யுத்தம் பற்றி அரசு கொண்டிருக்கும் நோக்கத்தை உடனடியாக பொதுமக்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்று கூறினார். -வி

## கோப்பாய்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலை 12 பேர் (அதிகூடியபுள்ளி 170), நீர்வேலிகரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாசாலை 10 பேர் (அதிகூடியபுள்ளி 177, கோப்பாய் நாவலர் வித்தியாலயம் 8 பேர் (அதிகூடியபுள்ளி 181), நீர்வேலி சி. சி. த. க. எம். எஸ் 6 பேர் (அதிகூடிய புள்ளி 178), அச்சுவேலி சென்திரேசா வித்தியாலயம் 6 பேர் (அதிகூடிய புள்ளி 171)

உடுவில் பிரதேச கல்விப் பிரிவில் சித்தியடைந்தோர் தொகை:

உடுவில் மகளிர் கல்லூரி 29 பேர் (அதிகூடிய புள்ளி 178) கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை 6 பேர் (அதிகூடிய புள்ளி 190. இவர் அகில இலங்கை ரீதியில் தமிழ் பிரிவில் முதலாவது அதிகூடிய புள்ளியை பெற்றவர். சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயம் 9 பேர். ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாலயம்- 06 பேர் ஏழாலை அமெரிக்க மிஷன் பாடசாலை 6 பேர். சுதுமலை சிற்மயபாரதி வித்தியாசாலை 5 பேர். (இ109)

# பொருட்களை இறக்க இரு பாஜ்கள்

(கொழும்பு)

பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பலிலிருந்து பொருட்களை இறக்குவதற்காக புதிதாக இரு இழுவைப் படகுகள் (பாஜ்) கொழும்பிலிருந்து கொண்டுசெல்லப் படவுள்ளதாக புனர்வாழ்வு, புனர் நிர்மாண அமைச்சு தெரிவித்துள்ளது. —இ

# பென்ஷன் வவுச்சர்

(மானிப்பாய்)

டிசம்பர் மாதத்திற்குரிய பென்சன் வவுச்சர்களும் காசோலைகளும் யாழ். செயலக ஓய்வூதியம் பிரிவிலிருந்து நேற்று சம்பந்தப்பட்டவர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (71)

## எழுதுவினைஞர் பதவிகளுக்கான

# நியமனக் கடிதங்கள் கொழும்பிலிருந்து வரும்

(யாழ்ப்பாணம்)

எழுதுவினைஞர் மற்றும் அதனோடு இணைந்த பதவிகளுக்கான நேர்முகப்பரீட்சையின் பெறுபேறுகள் யாவும் இங்கிருந்து கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. இந்த பெறுபேறுகளின்படி சம்பந்தப்பட்டவர்களுக்கான நியமனக்கடிதங்கள் அந்தந்த திணைக்களங்களிலிருந்து அனுப்பி வைக்கப்படுமென யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார். (162-இ)

# ஜெரிடி சில்வா புதிய தளபதியென அரசு அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் புதிய தளபதியாக மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளாரென அரசு நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

53 வயதான ஜெரி டி சில்வா அடுத்த மாதம் 1ம் திகதி தொடக்கம் லெப். ஜெனரலாக பதவி உயர்வு பெற்று புதிய இராணுவத் தளபதியாக பதவி வகிப்பாரென அறிவிக்கப்பட்டது. (வி)

## 5ம் ஆண்டு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மகளிர் ஆரம்ப பாடசாலையில் 29 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர்.

இவர்களில் யாழ். புனித ஜோசெப்பொஸ்கோ வித்தியாலய மாணவன் செல்வன் சி. பிரணவன் 186 புள்ளிகளையும், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த செல்வன் வி. விபுலன் 180 புள்ளிகளையும், யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையைச் சேர்ந்த செல்வி எஸ். வித்தியா என்ற மாணவி 176 புள்ளிகளையும் பெற்றுள்ளனர்.

யாழ் நகரில் உள்ள சில முன்னணிப் பாடசாலைகளின் பெறுபேறுகள் வருமாறு:

யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி: 18 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர் செல்வன் எஸ் சபேசன் 186 புள்ளிகள். செல்வன் கே. ஐங்கரன் 179 புள்ளிகள்.

யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி: 12 மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர். செல்வி சங்கரி இராஜேந்திரா 184 புள்ளிகள். செல்வி லக்ஷனா கைலைநாதன் 170 புள்ளிகள்.

யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி: 8 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். செல்வன் என். கலைச்செல்வன் 152 புள்ளிகள். செல்வன் ஜி. தோமாஸ் 148 புள்ளிகள்.

யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்- 7 மாணவிகள் சித்தியடைந்துள்ளனர். செல்வி சித்ரா பிரான்சிஸ் 173 புள்ளிகள். செல்வி சுரனுகா ராசேந்திரம் 159 புள்ளிகள்.

-162-101-இ

# படையினரின் சீருடை தைப்போர் மீது நடவடிக்கை

(கொழும்பு)

முப்படையினர் அணியும் சீருடைகளை தைத்துக்கொடுப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸ் தலைமைச் செயலகம் எச்சரிக்கை செய்துள்ளது.

பொலிஸ் இராணுவ சீருடைகளை அணிந்து கொண்டு கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பல கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. இச்செயல்களை தடுக்கும் முகமாகவே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். வி-இ

# வடமராட்சியில் கடற்படை அதிகாலை பீரங்கி தாக்குதல்

(நெல்லியடி)

வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் கடலில் ரோந்து சென்ற ஸ்ரீலங்கா கடற்படையினர் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்

இச்சம்பவம் நேற்று அதிகாலை 4-15 மணியளவில் இடம்பெற்றது.

சுமார் 15 நிமிடம் நடாத்தப்பட்ட இப் பீரங்கித்தாக்குதலினால் அம்பன், குடத்தனை, மணற்காடு மக்கள் உறக்கத்திலிருந்து விழித்து பாதுகாப்பைத் தேடி பதுங்கு குழிக்குள் ஓடினார்கள்.

தெய்வாதீனமாக சேதம் எதுவும் ஏற்படவில்லையெனத் தெரியவருகின்றது. (160-இ)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லையா ஆச்சிப்பிள்ளை

வேலணை கிழக்கு 1-ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி செல்லையா ஆச்சிப்பிள்ளை 2-12-93 ல் வேலணையில் காலமானார். இவர் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் திருமகள், நடராசா, செல்வி நாமகள், காலஞ்சென்ற செல்வன் கருணாகரனின் தாயாரும், கணபதிப்பிள்ளை, வனசம்பிகையின் மாமியாரும், திருமதி அருட்செல்வி கணபதி ஜெகநாதன், (தபாலகம் வேலணை) பிரணவநாதன், அருள்வாணி ஆகியோரின் பேத்தியாரும், தசாகன், தசானுசனின் பூட்டியுமாவார். இவரது மறைவு குறித்த அந்தியக் கிரியைகள் பிரம்படி லேன் கொக்குவிலில் உள்ள இவரது மகளின் இல்லத்தில் இன்று சனிக்கிழமை (18-12-93) அனுஷ்டிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

மு. செ. நடராசா (மகன்)

க. சிவநாதன் (பேரன்)

பிரம்படி லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(சி 665)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under licence Number B/10 126/B.